This Question Paper consists of 37 questions [Section–A (19) + Section–B (9+9)] and 5 printed pages.

5 பக்கங்களை கொண்ட இவ்வினாத்தாளில் 37 வினாக்கள் உள்ளன. [பகுதி அ-(19), பகுதி ஆ-(9 +9)]

கோட் **53/SS/O/TM**

Roll No. | | | | | | | | | | | | |

**Set A**

# ( தமிழ் )
# ( TAMIL )
# (304)

தேர்வு நடைபெறும் நாள் மற்றும் தேதி : ..........................................................

தேர்வு மேற்பார்வையாளர் கையொப்பம் :1. ..........................................................

2. ..........................................................

---

*பொதுக்குறிப்புகள் :*

1. தேர்வு எழுதுவோர் தங்களின் வரிசை எண்ணை (Roll No.) வினாத்தாளின் முன்பக்கம் எழுத வேண்டும்.

2. வினாத்தாளில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களின் எண்ணிக்கையும் வினாத்தாளின் முன்பக்கம் அச்சாகியுள்ள வினாக்களின் எண்ணிக்கையும் மொத்த பக்கங்களின் எண்ணிக்கையும் சரியாக உள்ளனவா என்பதையும் அனைத்து வினாக்களும் வரிசையாக உள்ளனவா என்பதையும் சரிபார்க்கவும்.

3. வினாத்தாளில் ஏதேனும் அடையாளக் குறிப்புகள் இட்டாலோ அல்லது தேர்வு எழுதுபவர் தனது எண்ணை அதற்கென ஒதுக்கப்படாத இடத்தில் எழுதினாலோ தேர்வு எழுதுபவர் தேர்வு எழுதும் தகுதியை இழக்க நேரிடும்.

4. உங்களது வினாத்தாளின் கோட் 53/SS/O/TM மற்றும் செட் A என்று வினாத்தாளில் எழுதுங்கள்.

( தமிழ் )

# ( TAMIL )

# (304)

காலம்: 3 மணி ] [ மதிப்பெண்கள் : 100

குறிப்பு : (i) இந்த வினாத்தாள் பகுதி 'அ' மற்றும் பகுதி 'ஆ' என்னும் இரு பகுதிகளைக் கொண்டுள்ளது.

(ii) பகுதி 'அ' வில் உள்ள எல்லா வினாக்களுக்கும் தவறாமல் விடையளிக்க வேண்டும்.

(iii) பகுதி 'ஆ' வில் இரண்டு விருப்பப்பாடங்கள் உள்ளன. தேர்வாளர் இவற்றில் தங்களுக்குரிய ஒரு விருப்பப்பாடத்தின் வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.

(iv) வினாவிற்குரிய மதிப்பெண் அவ்வவ் வினாவிற்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ளது.

## பகுதி—அ

### புறவய வினா

குறிப்பு : எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

ஒரிரு சொற்களில் விடை தருக: 1×17=17

**1.** பாரதிதாசன் எதனை உயிரினும் மேலானது என்கிறார்? 1

**2.** ஆதன் யார்? 1

**3.** தக்கிணையாவது யாது? 1

**4.** ஆண்டாள் எந்த ஊரில் பிறந்தார்? 1

**5.** முனிவு என்ற சொல்லின் பொருள் யாது? 1

**6.** கவிமணி எவை தாயைப் பெரும் பித்தி ஆக்குகின்றன என்று குறிப்படுகின்றார்? 1

**7.** சினிமா, டெலிவிஷன் – தமிழாக்கம் தருக. 1

**8.** இராஜாஜி உப்புச் சத்தியாக்கிரகம் நடத்திய இடம் யாது? 1

**9.** ஏன் முடியாது? கதையில் வரும் முரளீதரனின் இலட்சியம் யாது? 1

**10.** பின்னங்கள் ................ எனப்படும். 1

**11.** சிறிய பொருளைப் பெரிதாக்கிக் காட்டுவது எது? 1

**12.** எட்டாம் வேற்றுமையை .......................... வேற்றுமை என்பர். 1

**13.** ................ ஆகியவை கட்டெழுத்துகள் ஆகும். 1

**14.** பெயர் வினைகளின் பண்பை உணர்த்தி அவற்றிர்க்கு உரிமை பூண்டு நிற்பன ........... ஆகும். 1

**15.** காடும் காடு கார்ந்த பகுதிகள் ................ கனப்படும். 1

**16.** கோயில் அடைந்தான் என்பது ................. தொகையாகும். 1

**17.** PRINT MEDIA - இச் சொல்லின் தமிழ்ச்சொல்லை எழுதுக. 1

**18.** (அ) எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்க: 4×3=12

*(i)* பெண்கள் கூறும் வெவ்வேறு வாழ்க்கை அனுபவங்களாக சுகந்தி சுப்பிரமணியம் கூறுவன யாவை?

*(ii)* எப்பாலும் ஆகாக் கெடும் ஏன்?

*(iii)* ‘பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்’ என்னும் கூற்றை செம்புலப் பெயல் நீரார் பாடல் வழி ஆராய்க.

*(iv)* உண்டாலம்ம இவ்வுலகம் - விளக்குக.

(ஆ) எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்க : 4×3=12

*(i)* மனிதநேயம் என்பது யாது?

*(ii)* ஏறுதழுவுதல் என்றால் என்ன? தற்காலத்தில் அதனை எப்பெயரால் அழைக்கின்றனர்?

*(iii)* கல்லணை கட்டுமானத்தின் சிறப்பு என்ன?

*(iv)* தமிழ் மொழியின் தனிச்சிறப்பு பற்றி எழுதுக.

(இ) எவையேனும் இரண்டனுக்கு விடையளிக்க : 4×2=8

*(i)* தன்விவரக் குறிப்பில் இடம் பெற வேண்டியவை யாவை?

*(ii)* வ. உ. சிதம்பரனாரின் இலக்கியப் படைப்புகள் யாவை?

*(iii)* இராமலிங்கனாரின் உயிர் இரக்கப் பண்பை விவரிக்க.

**19.** ஒரு பக்க அளவில் விடையளிக்கவும்:

(அ) எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்க : 6×2=12

*(i)* கவிஞர் கூறும் சிறைச்சாலை - தொலை நோக்குத் திட்டத்தை விளக்குக.

*(ii)* பராபரக்கண்ணி மூலம் குணங்குடியார் கூறுவன யாவை?

*(iii)* கல்வியின் சிறப்பை பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியனின் பாடல் வழி விளக்குக.

*(iv)* காலம் அறிதலின் அவசியத்தை வள்ளுவர் வழி நின்னு விளக்குக.

(ஆ) எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்க: 6×3=18

*(i)* தமிழ் இலக்கியங்களில் காணப்படும் உயர்வான சிந்தனைகள் பற்றி கூறுக.

*(ii)* தமிழில் உள்ள சிற்றிலக்கியங்கள் பற்றி எழுதுக.

*(iii)* இலக்குடன் உழைத்தால் வாழ்வில் உயர்ந்த நிலையை அடைய முடியும் என்பதை 'ஏன் முடியாது' நாடகம் வழி நிறுவுக.

*(iv)* தஞ்சை மற்றும் திருச்சி மாவட்டங்களின் சுற்றுலாத் தலங்களின் தனித் தன்மைகளை எழுதுக.

*(v)* இரட்டைக் காப்பியங்கள் என அழைக்கப்படுவதற்கான காரணத்தை எழுதுக.

*(vi)* ராசாத்திக்குக் கிடைத்த வாழ்க்கை விடியல் பற்றி எழுதுக.

(இ) ஏதேனும் ஒரு வினாவுக்கு விடை தருக : 6

*(i)* பெரிய புராணச் சிற்பங்களின் பெருமைகளை விளக்குக.

*(ii)* விளம்பரத்தின் நன்மை தீமைகளை எழுதுக.

## பகுதி —ஆ

## விருப்பப் பாடம்—**I**

( இணையமும் தமிழும் )

**20.** ஸ்பாம் என்பது 1

(அ) தேவையற்ற இ மெயில்கள்

(ஆ) பறவை

(இ) கணினியில் உள்ள பகுதி

(ஈ) ஒரு நோய்

**21.** செம்மொழித் திட்டத்திற்கு என உள்ள இணையதளம் எது? 1

**22.** Digital Library - என்பதன் தமிழ்ச் சொல் யாது? 1

**23.** Inbound call - என்றால் என்ன? 1

**24.** தமிழில் மின்னஞ்சல் அனுப்ப உதவும் இரண்டு சேவை நிறுவனங்களை எழுதுக. 1

குறிப்பு: ஏதேனும் ஒறு வினாவுக்கு விடையளிக்க : 4

**25.** அழைப்புச் சேவை மையத்தின் ஊழியர்கள் யார்?

**26.** இணையதள வழி எந்தெந்த நிலைகளில் தமிழைக் கற்றுக் கொள்ள முடியும்?

*குறிப்பு:* ஏதேனும் ஒரு வினாவுக்கு விடையளிக்க : 6

**27.** முகவர்களின் தகுதிகள் என்ன?

**28.** மின்னஞ்சல் முகவரியை உருவாக்குவது எப்படி?

## விருப்பப் பாடம்—II

( மேலாண்மை இயலும் தமிழும் )

**20.** நிறுவன மேலாண்மை என்றால் என்ன? 1

**21.** Cursor என்பதன் தமிழ்ச் சொல் என்ன? 1

**22.** நிகழ்வுக் குறிப்பின் அவசியம் என்ன? 1

**23.** கடிதங்களில் காணப்படும் பொதுப் பகுதிகள் யாவை? 1

**24.** கவனித்தல் என்றால் என்ன? 1

*குறிப்பு :* ஏதேனும் ஒரு வினாவுக்கு விடையளிக்க : 4

**25.** தொழில் நுட்ப மேலாண்மையின் பணிகள் யாவை?

**26.** தலைமை என்றால் என்ன?

*குறிப்பு:* ஏதேனும் ஒரு வினாவுக்கு விடையளிக்க : 6

**27.** மேலாண்மைத் தகவல் தொடர்பு குறித்து எழுதுக.

**28.** அமைப்புச் செய்தல் என்பது குறித்து விளக்கம் தருக.

★ ★ ★